செ.வெ.எண்:242 நாள்:13.04.2018

## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி வ.து., திருநெல்வேலி

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) வ.து., திருநெல்வேலி சார்பில் அனைத்து அரசுத் துறை அலுவலர்களுடனான சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மேலாளர் இயக்குனர் திரு.மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.இதில் சாலை பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு பேருந்து ஒட்டுநர்கள் இருசக்கர வாகன ஒட்டிகள் மற்றும் பாதசாரிகளுக்கு கொண்டு செல்வது தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது.மேலும் விபத்து நிகழ்வதற்கான காரணங்களும் அதனை தடுப்பதற்கான வழிமுறைகளையும் விபத்தை தடுப்பதற்கான நடைமுறைகளையும் விரிவாக கலந்தாய்வு செய்யப்பட்டது. இதில் தமிழ்நாடு அரசு கோக்குவரத்து கழகம் திருநெல்வேலி சார்பில் முதன்மை நிதி அலுவலர் சங்கர் பொது மேலாளர்கள் செல்வ கோமதிகுமார் துணை மேலாளர்கள்,கிளை மேலாளர்கள்,உதவி மேலாளர்கள்,சாலை மற்றும் போக்குவரத்துக் கழகம் சார்பில் துணை இயக்குநர்,போக்குவரத்துத் துறை சார்பில் இணை போக்குவரத்து ஆணையர்,வட்டார போக்குவரத்து அலுவலர்கள்,மோட்டார் வாகன ஆய்வாளர்கள், காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் காவல்துறை ஆய்வாளர்கள்,கல்விதுறை அலுவலர்கள்,நெடுஞ்சாலைத் துறை அலுவலர்,NHAI அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் போது தொடர்ந்து 25 வருடத்திற்கு மேல் மற்றும் 15 வருடத்திற்கு மேல் விபத்தின்றி பணிபுரிந்த ஒட்டுநர்கள் கவுரவிக்கப்பட்டார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி